சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2013–2014ஆம் கல்வியாண்டில் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், 50 தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் மற்றும் 50 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களுக்கு 01.01.2016 முதல் 31.12.2016 வரை தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (அகஇ 1) துறை

அரசாணை (1டி) எண் 323

நாள் 10.08.2016
திருவள்ளுவர் ஆண்டு 2047
ஆடி 26

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண்.185, பள்ளிக் கல்வி (அகஇ2) துறை, நாள் 17.9.2013.
2. அரசாணை (1டி) எண்.89, பள்ளிக் கல்வி (அகஇ) துறை, நாள் 12.3.2015.
3. பள்ளிக்கல்வி இயக்குநர் சென்னை–6 அவர்களின் கடித ந.க. எண். 001240/எல்/இ3/2016, நாள் .04.2016.

*********

**ஆணை:–**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2013–2014ம் கல்வியாண்டில் 50 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், தரம் உயர்த்தப்பட்ட அப்பள்ளிகளுக்கு 50 உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் பள்ளி ஒன்றுக்கு 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் ஏற்கெனவே செயல்பட்டு வரும் ஒன்று முதல் ஐந்து வகுப்புகள் தொடக்கப் பள்ளிகளாக நிலை இறக்கம் செய்யப்பட்டு அப்பள்ளிகளுக்கு தலா ஒரு தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 50 தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களும் தோற்றுவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–2014ஆம் கல்வியாண்டில் தோற்றுவிக்கப்பட்ட 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 50 தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களும் மற்றும் நிலை உயர்த்தப்பட்ட 50 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களும் பணி நிரவல் மூலம் 17.9.2013 முதல் நிரப்பப்பட்டு 16.9.2014 உடன் ஓராண்டு நிறைவு பெற்றதால் அப்பணியிடங்களுக்கு 17.9.2014 முதல் 31.12.2015 வரை தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேற்காண் அரசாணையின்படி 2013–2014ஆம் கல்வியாண்டில் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், 50 தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் மற்றும் நிலை உயர்த்தப்பட்ட 50 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 350 பணியிடங்கள் பணி நிரவல் மூலம் நிரப்பப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன எனவும், இப்பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு தொடர்நீட்டிப்பு வழங்கி 31.12.2015 உடன் ஓராண்டு காலம் நிறைவடைவதால் இப்பணியிடங்களுக்கு 01.01.2016 முதல் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு நன்கு பரிசீலிக்கப்பட்டு, 2013–2014ஆம் கல்வியாண்டில் தோற்றுவிக்கப்பட்ட 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் (ரூ.9300–34800 + தரஊதியம் 4600/–), 50 தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களும் (ரூ.9300–34800 + தரஊதியம் 4500/–), மற்றும் நிலை உயர்த்தப்பட்ட 50 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் (ரூ.9300–34800 + தரஊதியம் 4800/–) ஆக மொத்தம் 350 தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2016 முதல் 31.12.2016 வரை அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தேவை குறித்து நிதித்துறையின் ஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4ல் தொடர் நீட்டிப்பு அனுமதிக்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர் மற்றும் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களுக்கான சம்பளம் குறித்த செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

> 2202 பொதுக்கல்வி –02 இடைநிலைக் கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் – I திட்டத்தில் சேராதது – AA –அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் 01 – சம்பளங்கள்
> (த.தொ.கு 2202–02–109–AA–0108)

6. மேலே பத்தி 4ல் தொடர் நீட்டிப்பு அனுமதிக்கப்பட்டுள்ள தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்களின் பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின்கீழ் வைக்கப்பட வேண்டும் :–

> 2202 பொதுக்கல்வி – 01 தொடக்கக் கல்வி – 101 அரசு தொடக்கப் பள்ளிகள் – I திட்டத்தில் சேராதது – AC ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளங்கள் – 01 சம்பளங்கள்
> (த.தொ.கு 2202–01–101–AC–0101)

7. மேலே பத்தி 5 மற்றும் 6–இல் பற்று வைக்கப்படும் செலவினை மைய அரசின் நிதி உதவி பெறப்பட்டவுடன் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்ட நிதி / அனைவருக்கும் கல்வி இயக்க நிதியிலிருந்து மீளப் பெற்று “2202 01 102 AL 0003 / 2202 01 101 AA 1204” என்ற வரவுக் கணக்கில் செலுத்திடுமாறு அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்ட இயக்குநர் / அனைவருக்கும் கல்வி இயக்க மாநிலத் திட்ட இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.35003/கல்வி-II/2016, நாள் 05.08.2016–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொடக்க கல்வி இயக்குநர், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை–6.
திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 35.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35

**நகல்**
நிதித்(கல்வி–II/வரவு செலவு (பொது–II) துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி (வரவு செலவு) துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
11/8/16